1st March 1966]

Complaint against village officer.

* 142 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state :—

(*a*) whether the Government have received any complaint from the public of R. S. Mangalam, Thiruvadanai taluk of Ramanathapuram district regarding the alleged misappropriation of kist collections and the loans sanctioned to the ryots by the village officer ; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The Superintendent of Police, Ramanathapuram has reported that, on a complaint made by the Tahsildar, Tiruvadanai regarding the misappropriation of Government loan collection, a case has been registered at R. S. Mangalam Police Station and a charge sheet has been filed against the ex-Village Munsif who is under suspension.

திரு. செ. மாதவன் : அவர் எப்போது மோசடியில் ஈடுபட்டார்? எவ்வளவு ரூபாய் மோசடி செய்தார்? காலதாமதத்திற்கு காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : The Superintendent of Police, Ramanathapuram, has reported that on 11th January 1965, the Tahsildar, Tiruvadanai, made a complaint against the village officer, regarding the temporary misappropriation of a sum of Rs. 1,154-12 representing Government loan collections and a sum of Rs. 210·30 representing Government loan sent to him for disbursement.

மீமிசலில் பத்திரப் பதிவு அலுவலகம்

***143** கேள்வி—**திரு. ஆ. துரையரசன் :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அறந்தாங்கி வட்டம், மீமிசல் என்னுமிடத்தில் புதிய பத்திரப் பதிவு அலுவலகம் துவங்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ஆ. துரையரசன் : மீமிசல் பகுதியிலிருந்து அறந்தாங்கி 30 மைல் இருக்கிறது. அங்கிருந்து ஏழை, நடுத்தர மக்கள் அறந்தாங்கிக்கு வந்து பத்திரப் பதிவு செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. மீமிசலில்ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், பஞ்சாயத்துக் கூட்டு மன்றக் கூட்டத்திலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன. அது அரசாங்கத்திற்குக் கிடைத்ததா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. கோ. பூவராகன் : கோரிக்கைகள அரசாங்கததிறகு வநதன. மீமிசலில் பத்திரப் பதிவு நிலையம் வைத்தால் போதுமான வருவாய் இருக்காது. குறைந்த வருவாய்தான் வரும். ஆகவே, தற்போது அங்கு திறப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. கோ. சி. மணி : பத்திரப் பதிவு அலுவலகங்களில் சில இடங்களில் வேலை அதிகம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அந்த அலுவலகங்களில் உள்ள அதிகாரி இரண்டு மூன்று நாள் காம்ப் போட்டுக் கொண்டு பக்கத்து ஊருக்குச் சென்று அங்கே பதிவு செய்யும் முறையை அரசாங்கம் கொண்டுவருமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : பத்திரப் பதிவு அலுவலகத்தில் வேலை இல்லை என்ற தகவல் என்னிடம் இல்லை. எங்கெங்கு சென்று பத்திரப் பதிவு செய்ய வேண்டுமென்பது அப்போதைக்கப்போது பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : பத்திரப் பதிவு அலுவலகங்கள் என்று தனியாக இருப்பதற்குப் பதிலாக அந்த வேலையைப் பஞ்சாயத்து யூனியன்களுக்கே கொடுத்துவிட்டால் மக்களுக்குச் சிரமம் குறைவதோடு, சர்க்கார் பணமும் மிச்சமாகுமல்லவா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அதைப் போன்ற யோசனை ஒன்றும் இல்லை.

திரு. ஆ. துரையரசன் : அமைச்சர் அவர்கள் தந்த பதிலில் மீமிசலில் வருவாய் குறைவாக இருக்கும் என்று சொன்னார்கள். வருவாயை மட்டும் கணக்கிட்டுப் பார்ப்பது அவ்வளவு சரியாக இருக்காது. மக்களுக்குச் சௌகரியம் செய்து தருவதற்குத்தான் ஆட்சி இருக்கிறது. மக்களுடைய நன்மையை உத்தேசித்து மீண்டும் பரிசீலிக்க முன்வருவார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : சௌகரியம் ஓரளவு செய்து கொடுக்க வேண்டியதுதான். இருந்தாலும் மக்களுடைய பணத்தை எந்த அளவு நல்ல முறையில் செலவழிக்க வேண்டுமோ அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : வருவாய் குறைவாக இருக்கும் என்ற காரணத்தால் பத்திரப்பதிவு அலுவலகத்தை மீமிசலில் அமைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். குறைந்த பட்சம் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசிலிருந்து எவ்வளவு ரூபாய் வரவேண்டும்?

கனம் திரு. கோ. பூவராகன் : பத்திரப் பதிவு இலாக்காவில் குறைந்த பட்சம் 3,000 பத்திரங்களாவது பதிவு செய்யப்பட வேண்டும். மீமிசல் பகுதியின் பக்கத்திலிருக்கும் அலுவலகத்தில்கூட இன்னும் மூவாயிரத்தை எட்டிப் பிடிக்கவில்லை.

இந்திய பிரதமர் வருகை

*** 144** கேள்வி—**திரு. மு. கருணாநிதி :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடந்த நவம்பர் திங்கள், தலைமை அமைச்சர் சாஸ்திரியின் தமிழக வருகையை ஒட்டி சென்னை நாளிதழ்களுக்கு விளம்பரங்கள் ஏதேனும் தரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அவ் விளம்பரங்கள் எந்தெந்த நாளிதழ்களுக்குத் தரப்பட்டன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) அவ் விளம்பரங்கள் இந்து, மெயில், இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, சுதேசமித்திரன், நவசக்தி முதலிய நாள் இதழ்களில் பிரசுரிக்கப்பட்டன.

திரு. மு. கருணாநிதி : அந்த விளம்பரங்கள் எதிர்க்கட்சி ஏடுகளான நம்நாடு, முரசொலி, ஜனசக்தி போன்ற பத்திரிகைகளில் ஏன் வரவில்லை ?